**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.49/2025- PW-3**

| | |
|---|---|
| Name | திரு. சிவா |
| Husband/Father Name | மகாதேவன் |
| Village /Area | கீரை சாத்து |
| Taluk | காட்பாடி |
| Occupation | விவசாயம் |
| Age | 51 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 06.10.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 15.01.2025 அன்று நான் எங்கள் ஊரிள் உள்ள கடைக்கு சென்ற போது என்னுடன் கோவிந்தராஜீம் இருந்தார். கீரை சாத்து அங்கன்வாடி பள்ளி அருகே போலீசார் TN 23 N-2371 என்ற பதிவெண் கொண்ட பேருந்தின் முன் பக்க கண்ணாடி உடைக்கபட்டது சம்பந்தமாக போலீசார் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது நானும் என்னுடன் கோவிந்தராஜ் என்பவரும் பேசிக்கொண்டிருந்தோம் அப்போது போலீசார் எங்களிடம் பேருந்து கண்ணாடி உடைக்கபட்ட வழக்கு சம்பந்தமாக சம்பவத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்ய இருப்பதாகவும் எங்களை சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைப்படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை

மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் கைப்பற்றுதல் மகஜரில் உடைந்த கண்ணாடி துண்டிகள் சிறிதளவும், ஒரு கருங்கல்லும் போலீசார் மகஜரில் கைப்பற்றினார்கள் அதில் சாட்சியாக நானும் கோவிந்தராஜீம் கையொப்பம் செய்தோம். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்து சோளிங்கர் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இருந்து வராததால் வழக்கு சொத்தை அடையாளம் காண்பிக்க வேண்டி முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.06 16:08:16 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.